**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.55/2022**
**Prosecution Witness**:5

| Name | திரு. முருகன் (PW 5) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th **day of March 2026** by V.Nivedha Assistant, District Munsif Cum Judicial Magistrate Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் மாவட்ட குற்ற பதிவேடு கூடத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2019ம் தேதி 14.00 மணிக்கு கொடுமுடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் M.பரமேஷ்வரன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது அய்யம்பாளையம், செங்கோடம்பாளையத்தை சேர்ந்த நல்லசாமி மகன் கோவிந்தராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரைபெற்ற சார்பு ஆய்வாளர் M.பரமேஷ்வரன் மேற்படி புகாரின் பேரில் கொடுமுடி காவல்நிலைய குற்ற எண்.364/2019 ச/பி.279, 337 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசல் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் காயம்பட்டு சிகிச்சைக்காக திருச்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டவர் 24.12.2019ம்மதேதி 14.45 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலை பெற்ற சார்பு ஆய்வாளர் பரமேஷ்வரன் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 304(A) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு கோப்பை புலன் விசாரணையின் பொருட்டு கொடுமுடி வட்ட காவல் ஆய்வாளராகிய எனது பார்வைக்கு வைத்தார்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 15:12:47 +0530

2. வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 24.12.2019ம் தேதி மாலை 16.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான கொடுமுடி – காத்தம்பட்டி ரோடு முருகம்பாளையம், பகவதிஅம்மன் கோவில் அருகில் சென்று சாட்சிகள் சிவகுமார் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர்கள் சம்பவ இடத்தை அடையாளம் காண்பிக்க அவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவ இடத்தில் வைத்து சம்பவ சாட்சிகளான கோவிந்தராஜ், செந்தில், N.K.ராமசாமி மற்றும் பார்வைமகஜர் சாட்சிகளான சிவக்குமார் மற்றும் சந்திரசேகரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் 25.12.2019ம் தேதி காலை 07.00 மணிக்கு திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த இவ்வழக்கின் இறந்துபோன கணேசன் என்பவரின் பிரேதத்தின் மீது காலை 07.00 மணி முதல் 10.00 மணி வரை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை ஒன்று தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. இறந்துபோன கணேசன் என்பவரின் இறப்பிற்கான மருத்துவ ரீதியான காரணம் அறியும் பொருட்டு அவரது பிரேதத்தை சடலக்கூராய்வுக்காக திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு தலைமைகாவலர் 2057 சிவஞானம் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன்.

3. பின்னர் சாட்சிகள் செந்தில், செல்வராஜ், சிவசாமி, சிவசுப்பிரமணி, தினேஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் இவ்வழக்கை புலன் விசாரணை செய்ததில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும், வழக்கின் வாதி கோவிந்தராஜ் புகார்கொடுக்கும்போது வாகன எண். TN 81 6211 என்ற எண்ணுள்ள TVS XL என்பதில் கடைசி இரண்டு இலக்கமான 11 என்ற இரு எழுத்துக்களை எழுதாமல் அவசரத்தில் TVS XL TN 81 62 என எழுதிக்கொடுத்தது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:12:51 +0530

தெரியவந்ததால் இறந்து போன கணேசன் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவெண் TVS XL TN 81 6211 என்பதுதான் உண்மை என சமூகம் நீதிமன்றத்தில் தனி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த **தனி அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** 13.10.2020ம் தேதி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கொடுமுடி காவல்நிலையம் ஆஜரான இவ்வழக்கின் எதிரி பொன்னுசாமி என்பவரை 11.30 மணிக்கு கைது செய்து திரேக பரிசோதனை செய்து தக்க பிணையில் விடுவித்தேன். எதிரியின் வாகனமான TN 33 L 5619 என்ற பதிவெண் கொண்ட TVS 50 இருசக்கர வாகனத்தை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டாரபோக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தேன்.

4. 21.10.2020ம் தேதி விபத்தில் இறந்து போன கணேசன் ஓட்டிசென்ற இருசக்கர வாகனம் TN 81 6211 TVS XL வாகனத்தை வாகன தணிக்கைக்காக ஈரோடு கிழக்கு வட்டாரபோக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே இவ்வழக்கில் இறந்துபோன கணேசன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் கனகஸ்ரீ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினமே விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை வாகன தணிக்கை செய்த ஈரோடு கிழக்கு வட்டாரபோக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் சண்முகஆனந்த் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( TN 33 L 5619 TVS 50) அ.சா.ஆ.9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வறிக்கை ( TN 81 6211 TVS XL) அ.சா.ஆ.10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** அன்றையதினமே பிரேத பரிசோதனை வழிக்காவல் தலைமை காவலர் 2057 சிவஞானம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் புலன் விசாரணையில் இருந்து விபத்து ஏற்படுத்திய எதிரியின் வாகனத்திற்கு பதிவு சான்று மற்றும் காப்பீடு சான்று

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:12:57 +0530

ஆகியவை விபத்தின்போது அமலில் இல்லை, என்பது தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 304(A) இதசவிலிருந்து 279, 304(A) இதச உ/இ பிரிவு 192(1), மற்றும் 196 மோட்டார் வாகன சட்டம் ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 21.10.2020ம் தேதி இவ்வழக்கின் எதிரி பொன்னுசாமி மீது 279, 304(A) இதச உ/இ பிரிவு 192(1), மற்றும் 196 மோட்டார் வாகன சட்டம் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிரேத பரிசோதனை அறிக்கை, மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள், ஆகியவற்றை அரசு தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்யும் பொருட்டு அரசு தரப்பில் கு.வி.மு.ச.294(3) பிரிவின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சான்று ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

சம்பவம் நடந்த ரோடு போக்குவரத்து நிறைந்த ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் பாதசாரிகள் செல்வதற்காக நெடுஞ்சாலை துறை மூலமாக குறியீடுகள் எதாவது குறிக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த வீடு மற்றும் கடையில் இருந்தவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த உடன் சம்பவ இடத்திற்கு காவலர்கள் யாரும் சென்றார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் இரத்தக்றையோ, வாகனத்தின் உதிரி பாகங்களோ இருந்ததா என்றால் பார்வைமகஜரில் குறிப்பிடவில்லை. அ.சா.2ஐ எங்கு வைத்து எத்தனை முறை விசாரித்தேன் என்றால் 24.12.2019ம் தேதி சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தேன். பின்னிட்டு விசாரிக்கவில்லை. விசாரித்து வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினேனா என்றால் இல்லை. இறந்துபோனவர் அ.சா.1க்கு என்ன உறவுமுறை என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. அ.சா.2 செந்தில் எங்கிருந்து சம்பவத்தை பார்த்தார் என்று எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் முருகம்பாளையம், பிரிவு சண்முகம் வீட்டின் அருகில் நின்று பேசிகொண்டிருந்தபோது சம்பவத்தை பார்த்ததாக குறிப்பிட்டுள்ளார். எதற்காக அவர் அங்கு நின்று பேசிக்கொண்டிருந்தார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:13:02 +0530

என்றால் இல்லை. அ.சா.2 செந்தில் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் நின்று சம்பவ இடத்தில் பேசிக்கொண்டிருந்தார் என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. இறந்துபோன கணேசன் கிழககில் இருந்து ரோட்டை குறுக்கே கடந்து மேபுறம் சென்றபோது தான் விபத்து ஏற்பட்டதாக மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. எதிரி வடக்கில் இருந்து தெற்கு நோக்கி அவரது பாதையில் வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றாலும் சரியல்ல. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல்எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 15:13:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.